**தலைப்பு 320 - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய வருடத்திற்கானஅறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 2.3(அ)(iv) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 இன் பிரகாரம் பிணைகளை வழங்க வேண்டிய 06 நிர்வாக பதவிகள் மற்றும் 03 இரண்டாம் நிலை பதவிகளின் உத்தியோகத்தர்கள் உரிய பிணைத்தொகையை மேற்கொண்டிருக்கவில்லை. | 2.3(அ)(iii) |
| 2.7 | 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் கதிர்காம அலுவலகத்தில் 16 அடி அகலம் கொண்ட 903 அடி நீளத்தில் உள்ள உள்ளக வீதிகளை மேம்படுத்தி, கொங்கிரீட் அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள தனியார் வழங்குநர் ஒருவரிடமிருந்து, சீமெந்து, கல் மற்றும் மணல் போன்ற கட்டிட மூலப் பொருள்களை கொள்வனவு செய்தமைக்காக விலைப்பட்டியல் ஒன்றின் சார்பாக ரூபா 584,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கதிர்காமம் அலுவலகத்திற்கு இதுவரை கட்டிட மூலப்பொருட்கள் கிடைத்திருக்காததுடன் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| 3.7 | கதிர்காமத்தில் ஏனைய தரவரிசையாளர்களுக்கான விடுமுறை விடுதி கட்டிடத்தை தொழிலாளர் கிரயத்தை தவிர்த்து ரூபா 11.13 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு முன் உள்ளூராட்சி சபையின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கவில்லை. அங்கீகாரம் கிடைத்தவுடன், கட்டிடத் திட்டம் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது. இப்பிரிவுக்குள் இருந்தே ரூபா 2 மில்லியன் பெறுமதியான கட்டிட மூலப்பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக அதற்கு அரசாங்க நிதிகள் செலவிடப்பட்டிருந்தன. போட்டி கேள்வி செயன்முறையைப் பின்பற்றாமல் கட்டிட மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், நிர்மாணங்கள் தொடர்பான அத்தியாவசிய ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு கோவையில் | |

இடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் எடை குறித்த வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளாதமை மற்றும் பழைய அடித்தளத்தின் ஒரு பகுதியை பொறியியலாளரின் ஆலோசனை அல்லது மேற்பார்வையின்றி பயன்படுத்தியதால் கட்டிடத்திற்கு வெளியே சாய்ந்திருந்த நிர்மாணங்களின் போது 4 அடி உயரத்தில் பல செங்கல் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்ததால் மேலதிக செலவொன்று செய்யப்பட்டு அதற்கான பரிகாரம் செய்ய வேண்டியேற்பட்டது.இது நிர்மாணப் பணிகளில் தாமதமேற்படுவதற்கு காரணமாக இருந்தது. மேலும் கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மரங்கள் தரமற்றவையாக இருந்ததுடன் குளியலறையில் கசிவுகள் அவதானிக்கப்பட்டன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானப் பெறுவனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயம், கால்நடைகள் மற்றும் ஏனையவை; இசை மற்றும் நடனம்; பாதுகாப்பு சேவைகள்; மற்றும் நிர்மாண மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றின் மூலம் திணைக்களம் கணிசமான அளவு வருமானத்தை சேகரித்ததுடன், மீளாய்வாண்டில் இந்த வருமான மூலங்களிலிருந்து மொத்தம் ரூபா 1,565 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் ஈட்டப்படும் குறித்த வருமானத்தை கணக்கீடு செய்வதற்காக மீளாய்வாண்டிலும் நிதிக் கொள்கை திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டு தனியான வருமானத் தலைப்பொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு ஒரு தனியான வருமானக் குறியீட்டை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபன வரைவு , பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்காக தனியான வருமானத் தலைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### (ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கணக்கீடு செய்யப்பட்டபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கையகப்படுத்தல் முடிக்கப்படாத 299 நிலங்களில் 119,581 சதுர அடியில் திணைக்களத்தால் கட்டப்பட்ட 404 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்தல் ஹநடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்கள் கையகப்படுத்தலுக்காக அக் காணிகளை வைத்திருக்கும் நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | குறிப்பிட்ட சொத்துக்கள் ஆவணப்படுத்தப் பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய ACA 6 படிவத்தில குறிப்பிடப்படடுள்ள வாகனங்களில ஒரே வாகன இலக்கத்தில் 2 சந்தர்ப்பங்களில் வாகன மதிப்புகள் சேர்க்கப்படடிருந்த 30 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் இரட்டைக் கணக்கிடப்பட்ட வாகனப் பெறுமதி ரூபா 53 மில்லியன் ஆகும். | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் சரியாகக் கண்டறியப்பட்டு, நிலையான சொத்துப் பதிவேட்டை சரியான நேரத்தில் பராமரிக்கவும், அதற்கேற்ப கணக்குகளைத் திருத்துவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிலையான சொத்துப் பதிவேடு சரியாகப் பேணப்பட வேண்டும். |
| (iii) | திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 64 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் திணைக்களத்தால் விற்பனை செய்யப்பட்ட 20 வாகனங்களில், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 6 வாகனங்களை நிதிக்கூற்றுக்களில் இருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், எஞ்சிய 14 வாகனங்களுக்கான திணைக்களத்திற்கு பெறப்பட்டமை மற்றும் விற்பனை ஆகிய கொடுக்கல் வாங்கல் இரண்டையும் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அகற்றப்பட்டு 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரியாகப் பதிவு செய்யப்படும். | கொடுக்கல் வாங்கல் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2022 ஆம் ஆண்டில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து திணைக்களத்திற்கு பெறப்பட்ட கரிம உரங்கள் உற்பத்தி தொடர்பான 11 இயந்திரங்கள், 5000 லீட்டர் தண்ணீர் தாங்கிகள் 06, பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 07 இயந்திரங்கள், டிஜிட்டல் அளவுகோல் மற்றும் கிரீஸ் பம்ப்பொன்று மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சேர்க்கப்படவில்லை. | கையகப்படுத்தப்பட்டுள்ள 31 காணிகள் மற்றும் அங்குள்ள கட்டிடங்களின் பெறுமதிகளைக் கணக்கீடு செய்வதற்கு தேவையான மதிப்பீட்டு பெறுமதிகளை பெற்றுக்கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vi) | திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 31 காணிகளுடன் தொடர்புடைய 11.0716 ஹெக்டேர் காணியின் அளவு மற்றும் அந்த காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படாததுடன், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சேர்க்கப்படவில்லை. | 2022.12.31 இல் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட 555 அலுவலகங்களில் 31 அலுவலகங்கள் முறையாகக் கையகப்படுத்தப்பட்டன. மீதமுள்ள நிலத்துண்டுகளில் இருந்து 299 நிலத்துண்டுகளை முறையாக கையகப்படுத்தலாம் என இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த நிலத்துண்டுகள் எந்த நிறுவனங்களுக்கு சொந்தமானதோ அந்த நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | விரைவில் சட்டரீதியான உரிமையை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்குகின்ற பாதுகாப்பு மற்றும் பிற சேவைகளை வழங்கியமைக்காக 2022 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 334 மில்லியனான நிலுவை வருமானத்தை 2023 மார்ச் 24 வரை அறவிடுவதற்கு தவறிவிட்டது. | ஏற்கனவே கணிசமான அளவு நிலுவைத் தொகையை வசூலித்துள்ளதாகவும், மீதமுள்ள நிலுவைத் தொகையை விரைவில் வசூலிக்கும் பணியில் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாகவும். | உரிய நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிகிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்ட ரூபா 112.28 பெறுமதியான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கிடைக்காததால் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. | பொறுப்புக்களை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை<br>-----------------------------<br>xxviii ஆம் அத்தியாயத்தின் 1.3 | திணைக்களத்தின் 2569 படை வீரர்/வீராங்கனைகள் நீண்டகாலமாக தீவின் பல்வேறு பகுதிகளில் உள்ள கோவில்கள்/தொல்பொருள் இடங்களுக்கு பல்வேறு கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன் வீரர்/வீராங்கனைகளின் வருகை மற்றும் புறப்பாடு முறையாக மேற்பார்வை செய்யப்படாமல் 2022 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 1,294.78 மில்லியன் தொகை வழஙகப்பட்டிருந்தது. | படையின் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் சம்பந்தப்பட்ட வீரர்/வீராங்கனைகள் பணிபுரிவதாகவும் , கட்டளை அதிகாரியின் சான்றுப்படுத்தலின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகின்றதாகவும். | தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104(3), (4). | மிஹிந்தலை படைத் தலைமையகத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2021 திசெம்பர் 14ஆம் திகதி இயந்திர ரீதியில் நட்ட இழப்பொன்று எற்பட்டிருந்தது. அந்த நட்ட இழப்பைத் திருத்துவதற்கு ரூபா 1.06 மில்லியன் செலவேற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளதுள்ள துடன் , இந்த இழப்பு தொடர்பான ஆரம்ப கட்ட அறிக்கையொன்று 07 நாட்களுக்குள் வெளியிடப்படாததுடன் , 2023 மார்ச் 31 2023 வரை கூட முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணத்தில் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அறிக்கைகளைப் பெறுவதற்கு உளளக நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தொடர்புடைய நிதிப்பிரமாண த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் 371(5) | மீளாய்வாண்டில், திணைக்களத்தினால் 37 சந்தர்ப்பங்களில் 15 அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 2.17 மில்லியன் ஆன முற்பணம் 12 முதல் 207 நாட்களுக்கு இடையிலதன தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், ஒரு உத்தியோகத்தர் பெற்ற முற்பணத்தை செலுத்துவதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் செலுத்தப்பட முடியாத போதிலும் அதற்கு மாறாக, திணைக்களத்தால் 6 அதிகாரிகளுக்கு 19 சந்தர்ப்பங்களில் ரூபா 1.12 மில்லியன் ஆன முற்பணம் 2022 ஆம் ஆண்டில் ரூபா வழங்கப்பட்டிருந்தது. | இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கு மற்றும் அனைத்து பிரதி பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாண த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 891 | திணைக்களத்தில் பிணை வழங்கப்பட வேண்டிய 06 நிறைவேற்று பதவிகள் மற்றும் 03 இரண்டாம் நிலை பதவிகள் தொடர்பான 58 அதிகாரிகள் உரிய பிணைப் பணத்தை வைத்திருக்கவில்லை. | தற்போதுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் பிணை வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டம் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | திணைக்களப் படையினரின் சீருடைகளை தைக்கும் பணியை நிறைவு செய்யும் நோக்கத்தில் செயற்படுத்தப்படும் அனுராதபுரம் ரம்பேவ படையணியின் தையல் செயற்திட்டம் , நிர்மாணிக்கப்பட்டு வரும் ஆடைத்தொழிற்சாலை கட்டிடத்தின் தரைத் தளத்தில் 2016 ஏப்ரல் 03 இலிருந்து 06 வருட காலமொன்றாக இயங்கி வந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.. | | |
| (அ) | தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காததால், 2022 பெப்ரவரி மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2022 செப்டம்பர் 27 வரை சுமார் 08 மாதங்களுக்கு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. | சீருடைத் துணிகளை கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக, ஆடைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 08 மாத காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன், அந்தக் காரணங்கள் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. | ஆடைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை உரிய காலத்தில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், |
| (ஆ) | இந்த தையல் நிலையத்தில் 54 இயந்திரங்கள், 06 குளிரூட்டிகள், 13 மின்விசிறிகள், 164,202 அலகுகள் மூலப்பொருட்கள் மற்றும் 1247 அலகுகள் உதிரி பாகங்கள் மற்றும் பாகங்கள் சுமார் 08 மாதங்களாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. இவை விளைவற்ற நிலையில் இருப்பதால், அவற்றை மீண்டும் பயன்படுத்தும் போது பல்வேறு தொழிற்துறை சிக்கல்கள் ஏற்பட முடியுமென்பது அவதானிக்கப்பட்டது. | குளிரூட்டிகள் மற்றும் மின்விசிறிகள் மாதத்திற்கு இருமுறை சேவை செய்யப்பட்டு சுத்தம் செய்யப்படுவதுடன், இந்த ஆண்டுக்குள் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைக் வழிகாட்டுதல் 4.2.1 (இ) பிரகாரம் அடுத்து வரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளுக்கு விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் , 2022 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா .854 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றின் கீழ் தயாரிக்கப்பட்ட பெறுகைத்திட்டத்தில் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் அலகுகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. | ஒதுக்கீட்டின் அளவை கணிப்பிட முடியாததால் .3 ஆண்டுகளுககான ஒரு பெறுகை திட்டத்தை தயாரிப்பது நடைமுறையில் கடினமான பணியாகும், | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 6.36 மில்லியன் மதிப்புள்ள டயர்கள், டியூப்கள் மற்றும் கொலர்களை கொள்வனவு செய்தபோது , ரூபா 1.8 மில்லியன் மதிப்புள்ள கணனிகள் மற்றும் 01 லேசர் பொயின்டரை கொள்வனவு செய்தபோது மற்றும் ரூபா 1.07 மில்லியன் செலவிடப்பட்டு 60000 தண்ணீர் போத்தல்களை கொள்வனவு செய்தபோது அரச பெறுகை வழிகாட்டுதல்களின் பிரிவு 5.4.10 இன் பிரகாரம் செயலாற்றல் தோல்வி ஏற்படம் சந்தர்ப்பத்தில் பெறுகைஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கு செயலாற்றல் பிணையொன்று பெறப்படாது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கொளவனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2022.01.01 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கை நிதி 01/2022 இன் பந்தி இலக்கம் 1.8 இன் படி, ரூபா 2 மில்லியனுக்கு மேல் பெறுமதியான பெறுகைகளுக்கு மட்டுமே செயலாற்றல் பிணையொன்று எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அத்தியாயம் 5.4.10 "அ" இன் படி, பொருட்களின் சந்தை நிலைமைகள் மற்றும் வணிக நடைமுறையின் அடிப்படையில் பெறுகை நிறுவனத்தால் செயலாற்றல் பிணையொன்று பெறப்படவில்லை என்பதாக. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 5.91 மில்லியன் செலவில் கொண்டச்சிய மரமுந்திரித் திட்டத்திற்காக 540 கிலோ கிராம் Acetamiprid insecticide மருந்தை கொள்வனவு செய்த போது, பெறுகை வழிகாட்டுதல் கோவையின் 2.8.1 (ஆ) பந்தியின் பிரகாரம் ஒரு விடய நிபுணர் மற்றும் பெறுகை செயன்முறையில் போதுமான அறிவு உள்ள குறைந்தபட்சம் ஒரு உறுப்பினராவது தொழில்நுட்ப | பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்வதில் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்ததாலும், மரமுந்திரி திட்டத்தில் ஹெலோ∴பெல்டிஸ் நோய் தாக்கும் அபாயம் இருந்ததாலும், நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழுவில் உள்ளடங்க வேண்டிய போதிலும் இதில் பங்கேற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இந்த தேவைகளை பூர்த்தி செய்திரந்தமை கணக்காய்வின்போது உறுதிப்படுத்தப்படவில்லை. | அளவு அதிகரிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018ஆம் ஆண்டில் தொழிலாளர் இல்லாமல் ரூபா 15.37 மில்லியன் மதிப்பீட்டில் அனுராதபுரம் ரம்பேவ படையணியின; 115'x38' அளவான இரண்டு மாடி ஆடைத் தொழிற்சாலையை நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட போதிலும் அது தொடர்பான கட்டுமானப் பணிகள் கணக்காய்வு திகதியான 2022 செப்டம்பர் 27 வரையில் முடிக்கப்படுவதற்குத் தவறியிருந்தது. | குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக முடிவெடுப்பதற்காக 2023.02.20 அன்று குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் அறிக்கை கிடைத்ததும் இக்கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | திட்டமிட்டபடி நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் நீண்டகாலமாக தீவின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வந்த 555 காணிகளில், 2022 திசெம்பர் 31 வரை 31 காணிகளுடன் தொடர்புடைய 11.0716 ஹெக்டயார் ஆன காணிகள் மட்டுமே கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் , மீதமுள்ள 524 காணிகளை கையகப்படுததுவதற்கான நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 வரை முடிக்கப்படவில்லை. | 299 காணிகளை முறைப்படி கையகப்படுததுவதற்கு முடியுமென்பது கண்டறியப்பட்டுள்ள துடன், அந்த கையகப்படுத்தலுக்காக அக்காணிகளுக்கு உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | விரைவில் சட்டரீதியான உரிமைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான டிபென்டர், 03 ஜீப்கள், ஒரு வேன், முச்சக்கர வண்டி, 05 மோட்டார் சைக்கிள்கள், 02 டிராக்டர்கள் மற்றும் 03 டிராக்டர் டெய்லர்கள் என 16 வாகனங்கள் திணைக்களத்தினால் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அந்த வாகனங்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கையகப்படுததுவதற் கான மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சட்டரீதியான உரிமைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆணடில் குரகல படையணியில் ஏற்பட்ட கொங்கல வயல் பகுதியில் தலனபது தோட்டம் அழிவடைந்தமை மற்றும் இரண்டு பயிர் இழப்புகள் தொடர்பாக 2023 மார்ச் 27 ஆம் திகதி வரை நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை. | குரகல படையணியில் ஏற்பட்ட 02 இழப்புகள் தொடர்பாக 2022.04.05 அன்று குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கை கிடைத்த பிறகு அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். | குறித்த இழப்புக்கள் தொடர்பாக ஏற்பட்ட நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படவேண்டும். |
| (ஆ) | நி.பி.110 இன் பிரகாரம் திணைக்களத்தில் ஏற்பட்ட சேதங்கள் நாளதுவரையாக்கப்பட்டு இழப்பீடு தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 4.94 மில்லியன் மதிப்புள்ள இரண்டு விவசாய சேதங்கள் 2023 மார்ச் 27 வரை இழப்பீடு மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | 2022.01.01 முதல், சேதங்கள் மற்றும் இழப்புகளின் பதிவேட்டை சரியாக நாளதுவரையாக்கு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான தகவல்களை உள்ளிடுகையில், மொனராகலை படையணியின் சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான தகவல்கள். தவற விடப்பட்டிருந்தது. அத்தவறு 2023.03.31 இல் கண்டறியப்பட்டதுடன் , அந்த நட்ட இழப்பு பதிவேட்டின் இலக்கம் 09 மற்றும் 10 இன் கீழ் குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியாக இழப்பீடு மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மஹாஓயா படையணியின் கீழ் பாக்கியெல்ல உப பிரதேசத்தில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட செங்கல் செயற்திட்டங்களில் ஏற்பட்ட 762,322 செங்கற்கள் தட்டுப்பாடு காரணமாக ரூபா 5.45 மில்லியன் அன நட்டமொன்று ஏற்பட்டது. 2023 ஏப்ரல் 10 வரை அதில் ரூபா 2.55 மில்லியன் அறவிடப்பட்டபோதிலும் மீதமுள்ள தொகையான ரூபா 2.9 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு வதூலிக்க திணைக்களம் தவறியிருந்தது. | அனைத்து அறவீடுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கு உத்தரவிடப்பட்டிருந்ததாக. | பற்றாக்குறை விரைவில் அறவிடப்பட வேண்டியமை. |

## 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணித்த 31 அதிகாரிகளிடமிருந்து ரூபா 3.36 மில்லியன் ஆன கடன்கள் வசூலிக்கப்படாததுடன் , அதில் ரூபா 2.1 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் மீதிகளாகவும் , சேவையை விட்டு வெளியேறிய 195 அதிகாரிகளின் ரூபா 14.37 மில்லியன் கடன் மீதிகளும் காணப்பட்டதுடன் , அதில் 04 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கடன் மீதி ரூபா 5.26 மில்லியன் மற்றும் 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய கடன் மீதி ரூபா 4.12 மில்லியன் ஆன கடன் மீதியும் 200 அதிகாரிகளிடமிருந்து 2022 ஆம் வருட ஆரம்பத்தில் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட மொத்தம் 29.95 மில்லியன் ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுகப்பட்டிருக்கவில்லை. | மரணித்த 31 அதிகாரிகளின் பணிக்கொடை தொகையிலிருந்து அறவிடப்படுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தொகை பெறப்பட்ட பின்னர் கணக்குகள் சீராக்கப்படுவதாக மற்றும் கடன் நிலுவைகளை அறவிடுதல் தொடர்பான குழுவொன்றின் மூலம் கடன் நிலுவைகளின் சரியான தன்மை பரீட்சிக்கப்பட்டு நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டு அறவிடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றதாக. | குறிப்பிட்ட தொகை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | கெபிதிகொல்லாவ படையணியில் செயற்படுத்தப்படுகின்ற கிரீன்ஹவுஸ் மிளகாய் செயற்திட்டத்தின் தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்காணாமல் கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பான 20 விடயங்கள் தொடர்பாக ரூபா 4.47 மில்லியன் மதிப்பிலான 1,045 வகையான பொருட்கள் 2022 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதி வரை கிட்டத்தட்ட ஒரு வருட காலமொன்று குறித்த படையணியில எந்தவித உபயோகமும் இன்றி விளைவற்றதாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. | இந்த செயற்திட்டம் தற்போது கெபிதிகொல்லாவ படையணிக்கு மேலதிகமாக மேலும் 10 படையணிகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றதுடன், குறித்த படையணியின் தேவைக்கு ஏற்ப குறித்த பொருட்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | விரைவில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏனைய அதிகாரிகள் மற்றும் படைவீரர்/ வீராங்கனைகளின் வெற்றிடங்கள் 6,349 கே காணப்பட்டது. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது உள்ளபடியான பதவியணியினரிற்கு ஏற்ப அங்கிகரிக்கப் பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 |
| மூன்றாம் நிலை | 84 | 71 | 13 |
| இரண்டாம் நிலை | 126 | 73 | 53 |
| ஆரம்ப நிலை(நிரந்தர) | 39,960 | 33,682 | 6,278 |
| ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த) | - | 07 | - |
| **மொத்தம்** | 40,193 | 33,851 | 6,349 |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் 33,851 ஆன மொத்த பதவியணியினரில் மீளாய்வாண்டில் பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு 1,330 பேர் மட்டுமே பங்குபற்றியிருந்தனர். | அப்போது நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோய் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் தற்போது (2023) பயிற்சிப் பிரிவினால் திட்டமிட்டபடி பயிற்சித் திட்டங்களை நடாத்தப்பட்டு வருகின்றது. | பணியாளர் பயிற்சி மூலம் திணைக்களத்தின் செயல்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |